<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.
2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04ம் நாள் வியாழக் கிழமை

**<u>புதிய இடை நிலை மனு எண். 3/2025</u>**

in

**<u>புதிய இடை நிலை மனு எண். 2/2025</u>**

in

**<u>அசல் வழக்கு எண்.20/2025</u>**

பழனிச்சாமி ..... மனுதாரர்/1ம் பிரதிவாதி

... எதிர் ...

1.முத்தழகு

2.கருப்பையா ..... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதியாக கடந்த 21.11.2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.அழகேசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. P.ரெங்கசாமி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள காரண காரியங்களை முன்னிட்டு, மேற்படி வழக்கில் IA 02/2025 கடந்த 15.07.2025ம் தேதியில் மனுதாரர்/1ம் பிரதிவாதியைப் பொறுத்து ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/1 பிரதிவாதி தரப்பில், மேற்படி வழக்கில் தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா 15.07.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்தது என்றும், அன்று தினம் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பேருந்தில் வந்து கொண்டிருந்த சமயம் பேருந்து இயந்திர கோளாறு காரணமாக குறிப்பிட்ட காலத்திற்குள் நீதிமன்றத் வந்தயை இயலாத நிலை ஏற்பட்டதால் தன்னை பொறுத்து ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி இயலாமையும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், இம்மனுவுடன் எதிர்வழக்குரை மற்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனை ஏற்று கடந்த 15.07.2025ம் தேதியில் தன்னைப் பொறுத்து ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து தகுந்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 2ம் எதிர்மனுதாரர்/2ம் வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:(1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி ஏற்றுக்கொள்கிறார்)**

மனுதாரர்/ 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சி.பி.சி ஆர்டர் 9 ரூல் 7ன் கீழான மனுவும், அதனுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரத்திலும் கூறியுள்ள சங்கதிகள் அனைத்து உண்மைக்கு புறம்பானது என்றும், மனுதாரர்/பிரதிவாதிகள் பிரமாணப்பத்திரத்தில் மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்யாமல் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிதற்கு பேருந்தில் வழக்கறிஞரை அழைத்துக் கொண்டு வரும்போது கால தாமதம் ஏற்பட்டு அதனால் அழைக்கும்போது அன்று ஆஜராக இயலவில்லை என்றும் என்று கூறியிருப்பது இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அடியோடு மறுக்கப்படுகிறது என்றும், அதனை மனுதாரர்/1ம் பிரதிவாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், பின்னிட்டு தள்ளுபடி ஆன வழக்கை சி.பி.சி ஆர்டர் 9 ரூல் 7ன் கீழாக மனு செய்திருப்பதாகவும், தள்ளுபடி ஆனது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்று

கூறியிருப்பதும் ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்/1ம் பிரதிவாதி இவ்வழக்கை நடத்தினால் வழக்கில் தோல்வி ஏற்பட்டுவிடும் எனக்கருதி வேண்டுமென்றே பிரதிவாதிகள் ஆஜராவதற்கு போடப்பட்ட வழக்கில் காலம் தாழ்த்துவதற்காக திட்டமிட்டு வேண்டுமென்றே ஆஜராகாமல் இந்த எதிர்மனுதாரர்கள்/வாதிகைள பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், இன்னலையும், இடையூறையும் ஏற்படுத்த வேண்டும் பொய்யான விபரம் கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், இந்த வழக்கில் 2,3 பிரதிவாதிகள் அரசு தரப்பினராக உள்ளநிலையில் அவர்களுக்கு எந்த அறிவிப்பும் கொடுக்காமல் 1ம் பிரதிவாதி முன்னெடுப்பு மனு தாக்கல் செய்து இன்றைய தினம் எதிருரைக்காக வழக்கு இன்றைய தினம் போடப்பட்டுள்ளதும் ஏற்புடையதல்ல என்றும், சிபிசி வழக்கு றடைமுறைகளை பின்பற்றாமல் 1ம் பிரதிவாதியும் அவரது வழக்கறிஞரும் அவர்களது விருப்பம் போல் முன்னெடுப்பு மனு தாக்கல் செய்து இயற்கை நியதிக்கு முரணாகவும், நீதிமன்ற நடைமுறைகளுக்கு முரணாகவும் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றுள்ளனர் என்றும்,எனவே மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டி  எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**3. பிரச்சனைக்கான தீர்வு**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் இந்த மனுவும், IA 02/2025 ல் கடந்த 15.07.2025ம் தேதியன்று 1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை  ரத்து செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை தெரிவித்துள்ள போதிலும், மனுவில் கூறியுள்ள

காரணங்களை கருத்தில் கொண்டும், மேலும் இம்மனுவுடன் சேர்த்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டும், மேலும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள கால விரையத்தை ஈடு கட்டும் வகையில் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் இந்த மனுவினை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்/1ம் பிரதிவாதி செலவு தொகையாக ரூ.250/– எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 04–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.12.04 16:27:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.12.04 16:27:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.